**தலைப்பு 271 – திருகோணமலை மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தியிலிருந்து 2 ஆம் பந்தி வரை மாவட்ட செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியிலிருந்து தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் தரப்பட்டுள்ளன.

## 1. மாவட்ட செயலகத்திற்குரிய பிரதேச செயலகங்கள்

---

(அ) பட்டினமும் சூழலும்
(ஆ) பதவி ஸ்ரீபுர
(இ) கோமரன்கடவல
(ஈ) கிண்ணியா
(உ) சேருவில
(ஊ) மூதூர்
(எ) கந்தளாய்
(ஏ) குச்சவெளி
(ஐ) மொரவெவ
(ஒ) தம்பலகாமம்
(ஓ) வெருகல்

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 22 ஆந் திகதி திருகோணமலை மாவட்ட செயலகத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்

திருகோணமலை மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 329,692,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றில் ரூபா 323,065,594 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாவட்ட செயலகத்தின் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 6,626,406 அல்லது தேறிய நிதி ஏற்பாட்டில் 2 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 291,292,000 | 286,328,705 | 4,963,295 | 1.7 |
| மூலதனம் | 38,400,000 | 36,736,889 | 1,663,111 | 4.3 |
| மொத்தம் | 329,692,000 | 323,065,594 | 6,626,406 | 2.0 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 13 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 08 திணைக்களங்களால் முறையே ரூபா 966,877,829 மற்றும் ரூபா 12,591,810 ஆக ரூபா 979,469,639 கூட்டு மொத்த தொகையான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரை அந்நிதி ஏற்பாட்டில் ரூபா 860,215,883 மற்றும் ரூபா 11,267,973 ஆக ரூபா 871,483,856 கூட்டு மொத்த தொகையான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க முறையே ரூபா 106,661,946 மற்றும் ரூபா 1,323,837 தொகைகளாக ரூபா 107,985,783 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 27101 | 33,000,000 | 21,252,013 | 20,000,000 | 14,259,069 | 130,000,000 | 72,931,270 |

## 2.3 கட்டுநிதி கணக்கு

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7002/0000/00/0289/0014/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 78,705,293 ஆகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 6003/0000/00/0047/0000/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் மீதி ரூபா 224,475,056 ஆகும்.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டு கணக்கும் இணக்க கூற்றும் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பந்தி 1.1 இல் காட்டப்பட்டவாறு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ளன.

# 3. தலைப்பு 271 – திருகோணமலை மாவட்ட செயலகம்

## 3.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாதிருத்தல்

மாவட்ட செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891 (1) |
| மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454 (2) |
| நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |
| பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |
| கொள்வனவுக் குழுக் கூட்டங்களின் | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் |

| | |
|---|---|
| அறிக்கை | கோவையின் 2.11.3 (அ) வழிகாட்டிகள் |
| கேள்வி மனுக் கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டிகள் |

**3.2 எல்லைகள் பின்பற்றப்படாமை**

2013 இன் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூன்றாம் பட்டோலையில் குறிப்பிடப்பட்டவாறு திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 27101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்கான ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 20,000,000 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பெறுவனவு ரூபா 14,259,069 ஆக இருந்தது. இதற்கிணங்க ரூபா 5,740,931 ஆல் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.3.1 பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

04 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அச்செலவின விடயங்களுக்கான தேறிய நிதி ஏற்பாட்டில் 25 சதவீதத்திலிருந்து 47 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**3.3.2 ஏனைய அமைச்சுக்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்டத்தில் யானை மனிதர்கள் பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்வதற்கான தீர்வாக 09 பிரதேச செயலகங்களில் 26 யானை வேலிகளை நிர்மாணிப்பதற்காக 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து ரூபா 75 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாட்டில் ரூபா 15.6 மில்லியன் அல்லது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 21 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் கோமரன்கடவல, கந்தளாய், வெருகல், மூதூர் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்ட 11 யானை வேலிகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்பள்ளி மாணவர்களுக்காக பால் கோப்பை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு 2014 ஆம் ஆண்டின் போது சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் ரூபா 9,007,710 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலகத்தினால் அந்நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 4,638,601 அல்லது 51 சதவீதமானவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) திருகோணமலை மாவட்டத்தில் மூன்றாம் போகத்தில் பாசிப் பயறு பயிர்ச்செய்கையை பிரசித்தப்படுத்துவதற்காக விவசாய அமைச்சினால் ரூபா 16.618 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலகத்தினால் அந்நிதி ஏற்பாட்டில் ரூபா 3.691 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மொத்த நிதி ஏற்பாட்டில் 78 சதவீதமானவை உரிய செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விவசாயிகளுக்கு மத்தியில் சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பாவனையை பிரசித்தப்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது விவசாய அமைச்சினால் ரூபா 5.4 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலகத்தினால் அவற்றில் ரூபா 4 மில்லியன் அல்லது 74 சதவீதமானவை உரிய செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.4 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை தீர்த்துவைக்கப்படாதிருந்த கட்டுநிதி மீதி ரூபா 78,705,293 ஆக இருந்தது. அம்மீதியினுள் 2011 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வந்த ரூபா 130,000 கூட்டு மொத்தமான மீதியும் உள்ளன.

(ஆ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் பெற்றுக்கொள்ளப்பட்ட உப கட்டுநிதி தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 20 சந்தர்ப்பங்கள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த ரூபா 179,125 கூட்டு மொத்தமான குறித்த நோக்கத்திற்கான உப கட்டுநிதியானது செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டு 01 மாதத்திலிருந்து 04 மாதங்கள் வரையான வீச்சுடைய கால தாமதத்தின் பின்னர் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 நவம்பர் 20 ஆந் திகதிய 04/2014 ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி காசேட்டை மூடுவது

தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே தரப்படுகின்றது.

(i) மேலே குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டு மீதி தொடர்பான ஒரு குறிப்பு வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டு வங்கியின் மூலம் வரவுக் குறிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டு அதனை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தினால் 2015 சனவரி 27 ஆந் திகதியே கட்டுநிதி மீதி தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. அதற்காக 2015 சனவரி 26 மற்றும் 27 ஆந் திகதிகளில் முறையே ரூபா 38,575,293 மற்றும் ரூபா 40,000,000 ஆக ரூபா 78,575,293 கூட்டு மொத்த தொகையான வரவுக் குறிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) திருகோணமலை மாவட்டத்தில் 2014 திசெம்பர் மாதத்தின் போது ஏற்பட்ட திடீர் வெள்ள இடர் நிலையின் காரணமாக இன்னல்களுக்கு உள்ளாகிய மக்களுக்கு விரைவாக சமைத்த உணவு, உலர் உணவு மற்றும் ஏனைய தேவையான நிவாரணங்களையும் வழங்குவதற்காக GAT/DDMC/NDRSC/Flood A/2014 ஆம் இலக்க 2014 திசெம்பர் 28 மற்றும் 2014 திசெம்பர் 29 ஆந் திகதிய திருகோணமலை மாவட்ட செயலாளரின் கடிதத்தின் மூலம் ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாடு திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திடம் வேண்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தினால் ரூபா 40 மில்லியன் தொகையான கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. உரிய நிவாரணங்களை வழங்குவதற்காக அப்பணத்தை பயன்படுத்தாது 2015 சனவரி 27 ஆந் திகதி மீளச்செலுத்தப்பட்டிருந்தது.

## 3.5 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 ஆண்டுகளை மிகைத்த ரூபா 35,052,909 கூட்டு மொத்தமான 379 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பல்வேறு செயற்பாடுகளுக்காக 2011 ஆகஸ்ட் மற்றும் 2013 பெப்ரவரி மாதங்களின் போது

வழங்கப்பட்டிருந்த ரூபா 500,000 தொகையான நிதி ஏற்பாடுகள் உரிய செயற்பாட்டை நிறைவேற்றாது வைப்புக் கணக்கில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

## 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்

---

27101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஓய்வுபெற்ற மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்களின் முற்பண மீதிகளை மீளப்பெற்றுக் கொள்வது தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2005 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஓய்வுபெற்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 306,806 தொகையான கடன் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2004 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 858,363 கடன் மீதிகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடமுடியாதிருந்தது.

(இ) 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டுவரையான காலத்தில் சேவையை வறிதாக்கிய 11 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,125,042 கடன் மீதியை அறவீடு செய்வது சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 5,898,844 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அவ்வாறு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் 01 ஆண்டிலிருந்து 06 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலப்பகுதியாகக் காணப்பட்டு வருகின்ற போதிலும் அந்த நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளை அறவீடுசெய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

திருகோணமலையின் ஒல்லாந்தர் கோட்டையிலுள்ள 372 ஏக்கர்கள் காணி, அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் வீடுகள் 1981 சனவரி 16 ஆந் திகதிய 124 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தொல்பொருள் காணியாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2011 ஒக்தோபர் மாதம் வரை திருகோணமலை மாவட்ட செயலகம் செயற்பட்டு வந்த கட்டிடம் தொல்பொருள் திணைக்களத்திற்கு சட்டரீதியாக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக 2011 சனவரி 04 ஆந் திகதிய M/EP/1/7 A ஆம் இலக்க தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அக்கட்டிடம் 2015 யூன் 30 ஆந் திகதி வரை சட்டரீதியாக ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தைப் போல சில உத்தியோகபூர்வ இல்லங்களும் தற்பொழுது வரையும் அவ்வளவில் செயற்பட்டு வருகின்றது.

## 3.8 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 260 | பிரதேச செயலகத்தினால் பெறுனர்களின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளாது காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 384 (IV) | பட்டினமும் சூழலும், கந்தளாய் ஆகிய பிரதேச செயலகங்களில் காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் மாத்திரம் அச்செயற்பாடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 390 (ஆ) | பட்டினமும் சூழலும், கந்தளாய் ஆகிய பிரதேச செயலகங்களின் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் பணம் பெறுனர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக பெறுப்பேற்ற காசோலைகளை பாதுகாப்பாக வைத்திருக்காது அவை கோவைகள் வைத்திருக்கும் அலுமாரியில் பாதுகாப்பற்று வைக்கப்பட்டிருந்தன. |
| (iv) | நிதிப்பிரமாணம் 1646 | மாவட்ட செயலகத்தின் 08 குழாம் வாகனங்களுக்குரிய 2014 ஆம் ஆண்டிற்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை

---------------------------------------------------

| | |
|---|---|
| வழிகாட்டிகள் 4.4 | பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தினால் ரூபா 24.7 மில்லியன் பெறுமதியான 06 யானை வேலிகள் நிர்மாணிப்பதற்கான பெறுவனவுகளை ரூபா 2 மில்லியனுக்கு குறைக்கும் வகையில் 18 பகுதிகளாகப் பிரித்து கிராமிய சமூக அடிப்படையிலான குழுக்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

## 3.9 உள்நாட்டு நிதிகளின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டங்களைப் பூர்த்திசெய்யாது கைவிடுதல், செயற்திட்ட தாமதங்கள் என்பன தொடர்பான கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்

கோமரன்கடவலை, கந்தளாய், வெருகல், மூதூர் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் யானை வேலிகளை நிர்மாணிக்கும் 04 செயற்திட்டங்களுக்காக முறையே ரூபா 6,000,000 தொகை, ரூபா 10,400,000 தொகை, ரூபா 3,000,000 மற்றும் ரூபா 12,500,000 தொகைகளால் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. 2014 ஒக்தோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டிய அச்செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் கைவிடப்பட்டிருந்தன. அச்செயற்திட்டங்களை கைவிடுவதற்கான காரணங்களாக உறுதியான விடயங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) செயற்திட்டங்களைப் பூர்த்திசெய்யாது கைவிடுதல்

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அச்செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன. அச்செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாமைக்கு தாக்கமளித்த காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| சுமேதங்கரபுர ரேவத மாவத்தையில் வடிகாண் முறைமையும் வீதிக்கு கொங்கிறீட் இடலும் | 3,000,000 | - |
| பேதீஸ்புர மாவத்தையில் வடிகாண் முறைமையும் வீதிக்கு கொங்கிறீட் இடலும் | 7,000,000 | 3,340,276 |
| நெல்சன்புர உள்வீதியில் வடிகாண் முறைமையும் வீதிக்கு கொங்கிறீட் இடலும் | 10,000,000 | 739,860 |
| வரோதய நகர் மத்திய மாவத்தையில் வடிகாண் முறைமையும் வீதிக்கு | 5,000,000 | 717,611 |

| | | |
|---|---|---|
| கொங்கிறீட் இடலும் | | |
| சமன்புர வடிகாண் முறைமையும் வீதிக்கு கொங்கிறீட் இடலும் | 20,000,000 | 4,779,578 |
| கேனியாடி மாவத்தையில் வடிகாண் முறைமையும் வீதிக்கு கொங்கிறீட் இடலும் | 7,000,000 | 2,053,714 |
| சல்லி, சுனாமி வீடமைப்புச் செயற்திட்டத்தில் வடிகாண் முறைமையும் வீதிக்கு கொங்கிறீட் இடலும் | 3,000,000 | - |
| கப்பல்துறை 5 ஆவது மற்றும் 7 ஆவது மாவத்தையில் வடிகாண் முறைமையும் வீதிக்கு கொங்கிறீட் இடலும் | 2,500,000 | 1,834,604 |
| புல்மோட்டை சுனாமி கிராம மாவத்தைக்கு கொங்கிறீட் இடல் | 11,000,000 | 3,964,176 |
| கும்புறுபிட்டி MOH அலுவலகத்தை அபிவிருத்தி செய்தல் | 4,000,000 | 330,125 |
| தொகுதி 2 விகாரை மாவத்தை | 6,000,000 | 2,928,537 |
| ஜும்மா பள்ளி வீதி, நாமல் வத்த | 7,500,000 | 4,978,628 |
| சமகி மாவத்தை | 3,000,000 | - |
| படுகச்சிய சந்தியிலிருந்து முஸ்லீம் பிரதேசம் வரை | 13,900,000 | 879,137 |
| ஜப்பார் மாவத்தைக்கு காபட் இடல் | 5,000,000 | 473,593 |
| புஹாரி நகர் விளையாட்டு மைதான மாவத்தையை அபிவிருத்தி செய்தல். | 5,000,000 | 4,274,271 |
| மெத மாவத்தைக்குரிய காபட் இடுதல் | 5,000,000 | 3,083,321 |
| காவன்திஸ்ஸபுர மாவத்தைக்கு கொங்கிறீட் இடல் | 16,000,000 | 6,183,693 |

## 3.10 செயலாற்றல்

---------------------

2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீடு, செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

**போதியளவில நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

-----------------------------------------------------------------------------------------

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பிந்திய பிரச்சினை வேளைகளில் அரசாங்க காணிகள் தொடர்பான சிக்கல்களைத் தீர்த்துவைக்கும் துரித நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2013 சனவரி 31 ஆந் திகதிய 2013/1 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றுநிருபத்தின் மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தன. காணிப் பிணக்குகள் சம்பந்தமாக காணி ஆணையாளர் நாயகத்தின் 2008/4 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் கீழ் விண்ணப்பங்களைக் கோரும் போது குச்சவெளிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 24 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலிருந்து 13724 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 4151 விண்ணப்பங்களுக்கு மாத்திரம் தொடக்கப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் 9573 இற்காக தொடக்கப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.11 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------------

திருகோணமலை மாவட்டத்திலுள்ள வனசீவராசிகள் சரணாலயத்திற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 75 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. யானை வேலிகளுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக கேள்விகள் கோரப்பட்டிருந்ததுடன் அதற்காக இரண்டு தனியார் கம்பனிகளால் முறையே ரூபா 274,440 மற்றும் ரூபா 337,281 கேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி கூட்டப்பட்ட கொள்வனவுக் குழுவினால் குறைந்த கேட்பு மனுக்களைச் சமர்ப்பித்திருந்த தனியார் கம்பனிகளிலிருந்து உரிய உபகரணங்களைப் பெற்றுக்கொள்வது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாது பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் 18 யானை வேலிகளை நிர்மாணிப்பதற்காக கிராமிய சமூக அடிப்படைச் சங்கங்களுக்கு ரூபா 24.78 மில்லியன் தொகையான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. மாவட்ட செயலகத்தினால் அந்த சமூக அடிப்படையிலான சங்கங்களுக்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 9.7 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வொப்பந்தங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு கிராமிய சமூக அடிப்படையிலான சங்கங்களால் கொள்வனவுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படாது அதிக விலைகளைக் கொண்ட கேட்பு மனுக்களைச் சமர்ப்பித்த ஏனைய தனியார் கம்பனிகளிலிருந்து உபகரணங்களைக்

கொள்வனவு செய்வதற்காக சங்கங்களுக்குச் செலுத்தப்பட்ட அனைத்து பணமும் அந்த தனியார் கம்பனிக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) யானை வேலிகளை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த தொழில்நுட்ப கருவிகளை பராமரிக்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பௌதீக பரிசோதனையின் பிரகாரம் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு 06 மாதங்களுக்குள் செயற்பாடற்ற நிலைக்கு மாறியிருந்தது.

(இ) வில்கம வனத்திற்கு மத்தியில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட சுற்றாடல் பூங்காவைச் சுற்றி யானை வேலிகளை அமைப்பதற்கு ரூபா 12.9 மில்லியன் பெறுமதியான 08 மதிப்பீடுகளின் கீழ் 2014 திசெம்பர் 30 ஆந் திகதி வரை வேலை ஆரம்பித்தல் முற்பணமாக ரூபா 3.6 மில்லியன் கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் கீழ் வழங்கப்பட்ட உபகரணங்கள் பாதுகாப்பின்றி விளைவற்றுக் காணப்பட்டன. சுற்றாடல் பூங்காவின் நிர்மாணத்தை நிறுத்துவதற்கு கணக்காய்வுத் திகதியளவில் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது உரிய சுற்றாடல் பூங்காவின் நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்தது.

### 3.12 நட்டங்களும் சேதங்களும்

-----------------------------------------------

மாவட்ட செயலகம் மற்றும் 03 பிரதேச செயலகங்களில் 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் இடம்பெற்ற 12 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் நிதிப்பிரமாணம் 104(4) இன் கீழான விசாரணைகள் 2015 யூன் 30 ஆந் திகதி வரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.13 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------

2013 தேசத்திற்கு மகுடம் (தெயட்ட கிருள) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்ட 268 அபிவிருத்திச் செயற்திட்டங்களில் 90 செயற்திட்டங்களுக்கு மாத்திரம் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. சில செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. இவ்வாறு இரத்துச் செய்யப்பட்ட 11 செயற்திட்டங்கள் தொடர்பாக கொள்வனவுக் குழு அங்கத்துவப் படிகளாக ரூபா 38,500 தொகையும் ஏனைய அங்கத்துவப் படிகளாக ரூபா 27,500 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

## 3.14 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்ட செயலகத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட பற்றாக்குறைகள் சம்பந்தமாக மாவட்ட செயலகத்தினால் சரிசெய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்படுகின்றன.

| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு**<br><br>பந்தி இலக்கம் | **தொடர்புபட்ட விடயம்** |
|---|---|
| 1.8 (iii) | கொள்வனவுத் துறையின் மேல்மட்ட உத்தியோகத்தர் ஒருவர் கொள்வனவுக் குழுச் செயலாளராக நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 1.8 (iii) | கொள்வனவுக் குழு அங்கத்தவர்களாலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்களாலும் குழு கூட்டங்களின் போது இடம் பெற்ற நடவடிக்கைகள் தொடர்பாக வணிகரீதியான இரகசியங்கள் தொடர்பாக தாம் மதிப்பளிப்பதாகவும் தங்களின் பக்கச்சார்பின்மை, நேர்மை, தனிப்பட்ட சம்பந்தங்கள் இல்லாமை என்பன தொடர்பான கூற்றில் கையெழுத்திடாமை. |
| 1.11 (இ) | திருகோணமலை மாவட்ட செயலகத்தில் கொள்வனவுக் குழு முறைப்படியாக நியமிக்கப்படாதிருந்தும் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.9.2 வழிகாட்டியின் கீழுள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்க வருகைப் பதிவேடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 தேசத்திற்கு மகுடம் (தெயட்ட கிருள) கிராமிய மற்றும் பிராந்திய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்திற்குள் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு உரிய நிர்வாகச் செலவு நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி 06 கொள்வனவுக் குழு அங்கத்தவர்களுக்குரிய படியாக ரூபா 807,500 செலுத்தப்பட்டிருந்தமை. |
| 1.12 (அ) (II) | பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம் மாற்றுப் பயிர்ச்செய்கையின் கீழ் பயிரிடப்பட்ட விதைகள் வெற்றிகரமாக முளைத்திருந்தும் முன்னறிவித்தல் |

விடுவிக்கப்படாது நீர் திறந்துவிடப்பட்டதன் காரணமாக அவற்றினைப் பாதுகாக்க முடியாது அழிவடைந்திருந்தது. இது தொடர்பான சேதங்களை மதிப்பீடு செய்வதற்கும் அதற்குப் பொறுப்பானவர்களை உறுதிப்படுத்துவதற்குரிய அடிப்படை விசாரணைகள் எதுவும் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.12 (அ) (VII) 1 கிலோ கிராம் விதைப் பாசிப்பயறு ரூபா 250 இலிருந்து ரூபா 281 வரையான விலைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் அரசாங்கத்தின் ரூபா 200 நிவாரணத்தை தவிர்த்து மிகுதிப் பெறுமதி விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்தால் சேருவில பிரிவிற்காக விநியோகிக்கப்பட்ட விதைகளுக்காக ரூபா 39,528 தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டது.

1.12 (ஐ) (I) குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள 408 ஹெக்டயர் அரசாங்க காணி பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக 09 உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருந்ததுடன் மூன்று நீண்டகால குத்தகைதாரர்களினால் 2009 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாகக் காணப்பட்ட வருடாந்த குத்தகை வாடகையும் அதன் அடிப்படையிலான வாடகைப் பெறுமதியுமான ரூபா 69,980,984 தொகையான நிலுவைக் குத்தகையை அறவீடு செய்வதற்காக உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.

1.12 (ஐ) (II) உரிய குத்தகையாளர்களினால் குத்தகை உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் காணி பயன்படுத்தப்பட்டதா இல்லையா என்பது தொடர்பாக பிரதேச செயலகத்தால் மேற்பார்வை செய்யப்பட்டிருக்காமை.

1.12 (ஐ) (III) காணிகள் ஆணையாளரின் 1999 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 4/10/16124 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கிழக்கு பல்கலைக்கழகத்திற்காக 50 ஏக்கர் காணி நீண்ட கால குத்தகைக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் உரிய குத்தகை நிபந்தனைகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய வருடாந்த

குத்தகைப் பணமும் வருடாந்த குத்தகைப் பணத்தைப் போல மூன்று மடங்கான தவணைப் பணமும் அறவிடப்பட்டிருக்காமை.

1.12 (ஒ) அரசாங்க காணிகளில் குடியிருப்பவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பதிவுசெய்திருந்த 2106 உத்தரவுப் பத்திரங்களும் நன்கொடைப் பத்திரங்களும் குச்சவெளி, சேருநுவர, வெருகல், பட்டினமும் சூழலும் ஆகிய பிரதேச செயலகங்களினால் உரிய நலன் பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.15 முகாமைத்துவப் பலவீனம்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) உரிமை மாற்றிக் கொடுக்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கான புதிய கட்டிடத் தொகுதி ரூபா 399 மில்லியன் நிதி ஏற்பாட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு 2011 ஒக்தோபர் 12 ஆந் திகதி திறந்துவைக்கப்பட்டது. அக்காணி அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட போதிலும் 2015 யூன் 30 ஆந் திகதி வரை அதன் சட்டரீதியான உரித்தை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கீழே குறிப்பிட்ட பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் எழுதப்பட்ட காசோலைகள் 2015 மே மாதத்தின் கணக்காய்வுத் திகதி வரை பணம் பெறுனர்களுக்கு வழங்கப்படாது கையில் வைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

| **பிரதேச செயலகம்** | **காசோலைகளின் பெறுமதி** |
| --- | --- |
| | ரூபா |
| பட்டினமும் சூழலும் | 1,536,317 |
| கந்தளாய் | 659,158 |
| கோமரன்கடவல | 835,987 |
| குச்சவெளி | 152,335 |
| | 3,183,797 |

(இ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் விசேட அபிவிருத்தி 2014 இன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கோமரன்கடவல பிரதேச செயலாளர் பிரிவில் கெமுனுபுரவில் மூன்று பொது குடிநீர்க் கிணறுகளை நிர்மாணிக்கும் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் அவை முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டதாக 2014 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 220,868 தொகையான வேலைகள் சான்றுபடுத்தப்பட்டு கொடுப்பனவுகள் சிபாரிசு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) கந்தளாய் பிரதேச செயலகத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியன்று எழுதப்பட்ட ரூபா 655,239 பெறுமதியான 07 காசோலைகளுக்குரிய பொருட்கள் 2014 சனவரி 29 ஆந் திகதி வரை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கந்தளாய் பிரதேச செயலகத்தில் கணக்குகள் பிரிவிற்கு இணைத்துக்கொள்ளப்பட்டு சேவையாற்றி வருகின்ற அரசாங்க முகாமைத்துவ சேவை தரம் II இன் உத்தியோகத்தர் ஒருவரால் கொடுப்பனவு சான்றுறுதிகளைத் தயாரித்தல், காசேட்டை பராமரித்தல், கொள்வனவுக்கான கேட்பு மனுக்களைக் கோருதலும், கோவைகளைப் பேணுதலும், வழங்குனர்களுக்கு காசோலைகள் வழங்குதல், களஞ்சியத்திற்கு பொருட்களைப் பொறுப்பேற்றல், களஞ்சிய பதிவேடுகளைப் பேணுதல் முதலிய அனைத்து வேலைகளும் நிறைவேற்றப்படுவதன் காரணமாக அச்செயற்பாடுகளின் உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமாகக் காணப்படுகின்றது.

## 3.16 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

மாவட்ட செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை கீழே தரப்படுகின்றது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 33 | 24 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 33 | 15 | 18 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 759 | 415 | 344 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 128 | 95 | 33 | - |
| (v) | ஏனையவை (அமைய அடிப்படை) | - | 03 | - | 03 |
| | மொத்தம் | 953 | 552 | 404 | 03 |

மீளாய்வாண்டின் இறுதிவரை 404 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.